Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (30-11-65) இதழ் 291

விசுவாவசு கார்த்திகை 15 ஷஃபான் பிறை 6 செவ்வாய்க்கிழமை

## பாகிஸ்தானுக்கு 5 நாடுகளின் ஆயுதங்கள்!

புதுடில்லி, நவ 29

இந்தியா - பாகிஸ்தான் சண்டையில் பாகிஸ்தான் படைகளிடமிருந்து கைப்பற்றிய படைச்சாதனங்களில் பல ஐந்துநாடுகளில் உற்பத்திசெய்யப்பட்டவையென இந்திய வெளிவிவகார மந்திரி திரு. சுவர்ண்சிங் இன்று பார்லிமெண்டில்தெரிவித்தார். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, நவசீனு ஆகிய நாடுகளின் ஆயுதங்களும் படைச்சாதனங்களும் கைப்பற்றப்பட்டவைகளிலிருந்தன என்று கூறிய சர்தார் சுவர்ண்சிங் இந்தியாவும், பாகிஸ்தானும் நல்லுறவாகவில்லையென்பதால் இந்த ஆயுதங்கள் இந்தியாவுக்கு எதிராக உபயோகப்படுத்தப்படுமென்பதைபாகிஸ்தானுக்கு அவைகளை வழங்குமுன் அந்த நாடுகள் உணர்ந்திருக்கவேண்டும்' என்றுர்.

### சீன ஆபத்து

இந்தியப் பிரதேசத்தில் சீன ஊடுருவல் உப்பொழுது பெருமளவில் அதிகரித்திருப்பதாகவும் இது பற்றி கொழும்பு நாடுகளுக்கு அறிவிக்கவில்லையென்றும் திரு. சுவர்ண்சிங் கூறினுர்.

வடக்கு, கிழக்கில்

# ஜனவரி முதல் தமிழில் நிர்வாகம்?

## 'தைப்பொங்கல் பரிசாக' தேசீய அரசாங்கம் வழங்கலாம்

கொழும்பு, திங்கள்

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியில் நிர்வாகம்!**

தமிழ்ப் பேசும் மக்களுக்கு தேசிய அரசாங்கம் இதனைத் 'தைப்பொங்கல் பரிசாக' வழங்கும் என்று அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்புகள் கொண்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியை நிர்வாக மொழியாக்குவதற்கான ஷரத்துக்கள் யாவும் தயாராகிவிட்டதாகவும் இவை ஜனவரி மாதத்தில் அமுலாகுமென்றும் நம்பப்படுகிறது.

நியாயமான அளவு தமிழ் மொழி உபயோக மசோதா சட்டமாக்கப்பட்டபொழுதிலும் அவை முழுவதுமாக அமுல் செய்யப்படவில்லை. இப்பொழுது இச்சட்டத்துடன் விசேஷ ரத்துக்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவை அநேகமாக அடுத்த மாதத்துக்குள் பார்லிமெண்டுக்குக் கொண்டுவரப்பட்டு அமுல்செய்யப்படுமெனத் தெரியவருகிறது.

ஜனவரிமாதத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியை நிர்வாக மொழியாக்கும் முன்னரே நடவடிக்கைகள் யாவும் எடுக்கப்பட்டு வருவதாக நம்பப்படுகிறது.

## வட்டுக்கோட்டை பகுதியில் திட்டமிட்ட திருட்டு

வட்டுக்கோட்டை, திங்கள்

வட்டுக்கோட்டைப் பகுதியில் கடந்த ஒரு வார காலமாக திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டிவருகின்றனர். ஒருவார காலத்திற்குள் பல வீடுகளிலும், வர்த்தகஸ்தாபனங்களிலும் பெறுமதிவாய்ந்த பொருட்களையும், பணத்தையும் திருடிச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. இவர்கள் தங்கள் கெட்டித்தனத்தை வெகு சாதுர்யமாக நிலைநாட்டி வருகின்றனராம்.

நள்ளிரவில் காரில் வந்து வெகு துணிவுடன் வீடுகளின் ஓட்டைப் பிரித்து உள்ளே இறங்கி நொடிப்பொழுதில் களவாடிச் சென்று விடுகின்றனர். சென்றவார நடுப்பகுதியில் மெல்லிய அரவம் கேட்டுக் கடைக்காரர் ஒருவர் விழித்துக் கொண்டு எழும்புவதற்கிடையில் திருடர்கள் மறைந்து விட்டனராம். ஒரு வீட்டில் இரண்டு தாலிக்கொடிகளைத் திருடக்கூடிய இக்கோஷ்டியினரில் வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த சிலரும் இருக்கவேண்டும் என நம்பப்படுகிறது.

ஒருநாளைக்கு காரில் வரும் இவர்கள் அடுத்தநாள் ஸ்கூட்டரில் அல்லது மோட்டார் சைக்கிளில் வருவதாகவும் கூறப்படுகிறது.

வட்டுக்கோட்டைப் பகுதியில் வட்டாரம் வட்டாரமாகத்திருட்டுவேலையில் திட்டமிட்டுக்கொள்ளையடிக்கும் இக்கோஷ்டியினரைக் கண்டுபிடிப்பதில் சங்கானைப் பொலிசார் தீவிர கவனம் செலுத்திவருகின்றனர்.

## பல்கலைக்கழக தமிழ் மாணவர்களின் கஷ்டம்

### தமிழரசுக்குழு ஆலோசனை

கொழும்பு, வெள்ளி

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள தமிழ் மாணவர்களை பாரதூரமான பிரச்னை எதிர்நோக்கியுள்ளது. அந்த மாகாணங்களிலுள்ள தமிழ்ப் பாடசாலைகள் மூடப்படுவதாலும் தமிழ்வகுப்புகள் நிறுத்தப்படுவதாலும் மாணவர்களைச் சேர்க்கும் விஷயத்தில் பாரபட்சம் காட்டப்படுவதாலும் தமிழ் மாணவர்களுக்குப் போதனை அளிக்கப் போதிய தமிழ் ஆசிரியர்கள் இல்லாதிருப்பதாலுமே இவ்வித நிலை எழுகிறது. என்று சென்ற சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கொழும்பில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி மத்திய செயல் கமிட்டிக் கூட்டத்தில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற மேற்படி செயல் கமிட்டிக் கூட்டத்தில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்கள் மீது காட்டப்படும் பாரபட்சம் பற்றியும் குறிப்பிடப்பட்டது.

பல்கலைக்கழக அதிகாரிகள் கலைப்பகுதியில் பயிலும் மாணவர்கள்மீது பாரபட்சம் காட்டுகிருர்கள் எனக் கூட்டத்தில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டு பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பல்கலைக்கழக உபவேந்தரின் பாரபட்ச நடவடிக்கை குறித்து செயல்கமிட்டி தனது கண்டனத்தைத் தெரிவிக்கிறது:

(1) கலைப்பகுதியிலுள்ள முதலாவது வருட தமிழ் மாணவர்களுக்கு கொழும்பு குதிரைப்பந்தயத் திடலில் அரசாங்கத்தின் அங்கீகாரமோ அல்லது பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரபீடத்தின் உத்தரவோ இன்றி வகுப்புகளை நடாத்த நடவடிக்கை மேற்கொண்டதற்காகவும், (2) தமிழ் துறைப்பகுதி தலைவரும் தமிழ்ப் பேராசிரியரும் சிபார்சு செய்திருந்தும்கூட பேராதனையில் ஆங்கில மொழிமூலமாகக் கல்விபயிலும் மாணவர்கள் தமிழையும் ஒருபாடமாகப் படிப்பதற்கு மறுத்ததற்காகவும் மேற்படி கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இவ்வித நடவடிக்கைகள் பல்கலைக்கழக நிர்வாகசட்டவிதிகளுக்கு முரணானவை என எடுத்துக்கூறப்பட்டது.

இவ்வித விஷயங்கள்பற்றியும் சகல தமிழ்மாணவர்களையும் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள் குறித்தும் பிரதமருக்குத் தெரிவித்து இவற்றுக்கான நிவாரணம் காணுமுகமாக அவரைப் பேட்டி காண்பதற்காக திரு. எஸ். ஜே. வி., டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் ஆகியோரைக் கொண்ட ஒரு உப கமிட்டி நியமிக்கப்பட்டது.

### புதிய நியமனம் தேவை

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள மாகாணங்களில் தமிழ்ப் பாடசாலைகளும், வகுப்புகளும் மூடப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்காக புதிய தமிழ்ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்றும் தேவையான இடங்களுக்கு ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டுமென்றும் இதில் அரசியல் தலையீடுகள் எதுவும் இருக்கக்கூடாதென்றும் கல்விமந்திரியைக் கேட்டுக் கொள்ளதென முடிவு செய்யப்பட்டது.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த எம். பி. க்களும் செனட்டர்களும் மத்திய செயல்கமிட்டிஅவசியமெனகருதிஞலன்றி ஸ்தலஸ்தாபனத் தேர்தல்களில் போட்டியிடக் கூடாதெனசெயல்கமிட்டி முடிவு செய்தது.

கட்சியின் அடுத்த வருடாந்த மகாநாட்டை அடுத்த வருடம் பெப்ரவரி 10, 11, 12-ம் திகதிகளில் கல்முனையில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது. வரவேற்புக் கமிட்டித் தலைவராக [illegible]

## மொழி உரிமைகள் அதிவிரைவில் கிடைக்கும்

### மந்திரி திருச்செல்வம் உறுதி

வெள்ளவத்தை, திங்கள்

''தமிழரை இந்த நாட்டில் இருந்து பலாத்காரமாக எவரும் அகற்றிவிட முடியாது. இந்த நாட்டில் தமிழர்கள் அடிமைகளாக வரவில்லை. தமிழ் அரசர்கள் இந்த நாட்டை அரசாண்டுள்ளனர். பிரஜாஉரிமை பெருத மக்கள் உட்பட அனைவரும் தமது கவலைகளை, உணர்ச்சிகளை கலை மூலம் வெளியிடவேண்டும்'' என்று கொழும்பு செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் தேசியக் கலைப் பேரவையினர் நடாத்திய நாடகவிழாவின்போது உள்ளூராசி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் குறிப்பிட்டார்.

இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் திரு. ஏ. இளஞ்செழியன் தலைமை வகித்துப் பேசுகையில், ''இன்று தமிழ்மக்களிடம் காணக்கூடிய மகிழ்ச்சி நிரந்தரமாக நீடித்திருக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்

அமைச்சர் மேலும் பேசுகையில், ''தேசிய அரசாங்கத்தில் மந்திரியாகவும் தமிழரசுக்கட்சியில் அங்கத்தவராகவும் இருக்கும் நான் எனது கட்சியின் கொள்கையை ஒருபோதும் விடப்போவதில்லை. மொழிஉரிமையினை தமிழருக்குப் பெற்றுக்கொடுப்பதே எனது முதலாவது கொள்கை. அதிவிரைவில் அது தீர்க்கப்பட்டுவிடும். பிரஜாஉரிமைப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு நாம் இறுதிவரையில் போராடுவோம்என்று'' கூறினுர்.

தேசிய அரசாங்கம் மனித உரிமைக்கு விரோதமாக ஒருபோதும் நடக்காது. பிரஜாஉரிமைப் பிரச்னையும் விரைவில் தீர்க்கப்படும் என்றும் அவர் சொன்னுர்.

''1947ம் ஆண்டின் பின் சிங்களக் கலைத்துறை முன்னேறிய அளவிற்குத் தமிழ்க் கலை ஈழநாட்டில் முன்னேறவில்லை. பண்டைக்காலத்தில் தமிழர் முன்னேறியிருந்தனர். அடிமைத்தளையில் தமிழர் கவலையுடன் இருக்கும் நிலையில் பாரதி தோன்றி, தமிழர்கள் அடிமைகள் அல்லவென்று பாடினுன். அரசியலில் ஒருகாலம் நாம் அனுதைகளாக இருந்தோம். நாம் அனைவரும் நமது கவலைகளை உணர்ச்சிகளை கலைகளின் வாயிலாக வெளியிடுதல்வேண்டும். நாம் எல்லோரும் தமிழர். மலைநாட்டாரும் தமிழர். அவர்களின் பிரச்னையும் எங்கள் பிரச்னை. அது தமிழரின் பிரச்னையாகும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

## இந்தியாவுக்கு முழுத் திருப்தியில்லை

புதுடில்லி, நவ. 29

''போர்நிறுத்த விதிகளை பாகிஸ்தான் மீறுவதை ஐ. நா. பார்வையாளர் விசாரிக்கும் முறையில் இந்தியா முழுத் திருப்தியடையவில்லை'' என்று இந்தியா வெளி விவகாரமந்திரி சர்தார் சுவர்ண்சிங் இன்று பார்லிமெண்டில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

போர் நிறுத்த ஏற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கு இரண்டு தலைமையின்கீழ் பார்வையாளர் குழு ஒழுங்கு செய்திருப்பதைவிட ஒரு தலைமையின்கீழ் ஒழுங்கு செய்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் என்று சுவர்ண்சிங் கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஒவ்வொன்றுக்கும் ஒரு தனி அழகுண்டு. ஏனெனில் எல்லாவற்றிலும் தெய்வம் வசிக்கிறதல்லவா? விகாரமென்பதே கிடையாது. எல்லாவற்றிலும் தெய்வத்தைக் காணும் பக்குவம் வந்தபின் நல்லவரைமட்டுமின்றி கெட்டவரென்பாரையும் நேசிப்போம். — சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு கார்த்திகை மீ 15 உ. (30-11-65)


## பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பகுதிக்கு ஆபத்து

பேராதனைப் பல்கலைக் கழகத்திலுள்ள கலைப்பிரிவுத் தமிழ்ப் பகுதி முழுவதையும் கொழும்புக்குக் கொண்டு செல்லத் திட்டமிடப்பட்டு சென்ற வருடத்தில் ஒரு பிரிவு மாணவர் கொண்டு செல்லப்பட்டனர். இவ்வருடம் கலைப்பகுதித் தமிழ்மாணவர் கொண்டு செல்லப்பட்டனர். அடுத்த வருடம் கலைப்பகுதித் தமிழ்ப் பிரிவே பேராதனையில் மூடப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளதென்றும் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் கவலையுடன்எழுதியிருந்த கடிதத்தை நேற்று இதேபக்கத்தில் பிரசுரித்திருந்தோம்.

இந்நாட்டில் தமிழ் பேசும் மக்கள் பரந்து வாழ்கிறார்கள். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அவர்களுக்கும்பங்குண்டு. பல்கலைக்கழகத்தில் இடநெருக்கடி பெரும் பிரச்னையாக உருவெடுத்துள்ளதென்பது உண்மையே. இடநெருக்கடியைத் தீர்க்க மேலும் சில சர்வகலாசாலைகளை அமைக்க வேண்டுமென்றும் குறிப்பாக கல்வி வசதிகள் உள்ள யாழ்ப்பாணத்தில் இராமநாதன் பல்கலைக்கழகமோ பல்கலைக்கழகப் பிரிவு ஒன்றையோ அமைக்க வேண்டுமென்றும் நாமும் இதேபத்தியில் இதற்கு முன்னர் யோசனை தெரிவித்திருக்கிறோம். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியைக் காரணம் காட்டி அங்கு தமிழ்ப்பிள்ளைகளுக்கே இடமில்லாமல் செய்வதை இந்நாட்டின் தேசிய ஐக்கியத்தை விரும்பும் எவருமே ஒப்புக் கொள்ளமாட்டார்கள். பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்ட தமிழ்ப் பகுதி கலைப்பிரிவு மாணவர்களும் புதிதாகச் சேர்ந்த மாணவர்களும் கொழும்பு 'குதிரைப்' பல்கலைக் கழகத்தில் (குதிரைப்பந்தயத்திடலில் அமைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகப் பிரிவை சில சிங்களப் பெருமக்கள் அசுவவித்தியாலயம் என்றுதான் அழைக்கின்றனர்) அனுபவிக்கும் கஷ்டங்கள் கொஞ்சமல்ல. அசுவபல்கலைக்கழகம் பெயரளவில்தான் பல்கலைக்கழகமாக இருக்கிறதே தவிர பல்கலை பயிலும் கலைக்கூடமாக இல்லை. பேராதனையிலுள்ள தமிழ்ப்பகுதி மாணவர்களை மட்டும் இங்கு கொண்டு செல்வதால், தமிழ்ப்பேசும் மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள். தமிழராகப் பிறந்துவிட்டதற்கு இதுவும் ஒரு தண்டனையா?

யாழ்ப்பாணத்தில் இராமநாதன் பல்கலைக் கழகம் அல்லது பல்கலைக் கழகப்பிரிவு ஒன்றை அமைப்பதால்இடநெருக்கடி ஓரளவு குறையும். இப்பகுதி மாணவர்கள் கொழும்புக்கும் பேராதனைக்கும் சென்று அனுபவிக்கும் கஷ்டங்களும் குறையும். தேசிய வீரர் இராமநாதருக்கு நினைவுச் சின்னமும் நிறுவுவதாகும். ஆனால் வடக்கு மாகாணத்துக்குவெளியேயும் குறிப்பாக மலைநாட்டில் வாழும் லட்சக்கணக்கான தமிழ் பேசும் பிள்ளைகளுக்கு இராமநாதன் பல்கலைக்கழகம் மட்டும் உயர் கல்வி அளித்துவிட முடியாது. இந்த மாணவர்களுக்கு பேராதனைப் பல்கலைக்கழகம்தான் தொடர்ந்து உயர் கல்வி அளிக்கவேண்டும். கல்வி உரிமையை எக்காரணம் கொண்டும் ஒரு குறிப்பிட்ட சமுகத்துக்கு மறுப்பதோ, நசுக்குவதோ ஜனநாயக தர்மமுமல்ல, மனிதநீதியுமல்ல. பேராதனையில் இடமில்லையானால் தமிழ்ப்பகுதி மாணவர்களை மட்டுமல்லாது இதர மாணவர்களையும் வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வதே முறையாகும்.

இடநெருக்கடியைக் காரணம்காட்டி ஒருபிரிவு மாணவர்களை பேராதனையிலிருந்து அகற்றுவது சிறியவிஷயமல்ல. இது ஒரு குறிப்பிட்ட சமுகத்தின் எதிர்காலத்தையே பாதிப்பதாகும். இந்த திட்டமிட்ட நடவடிக்கையை நமது பிரதிநிதிகள்-இலங்கை முழுவதிலும் தமிழ்பேசும் மக்கள் இதர சமுகத்தவரோடு சரிசமமாக, சமசந்தர்ப்பம் பெற்று வாழவேண்டுமென்பதே தமது குறிக்கோள் எனக்கூறும் தமிழ் பேசும் பிரதிநிதிகள், கட்சிப்பூசல்களை ஒதுக்கிவிட்டு, உடனடியாகத் தடுத்து நிறுத்த முன்வரவேண்டும். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பேசும் மாணவர்களுக்கு இனி இடமில்லைஎன்றஒரு நிலை ஏற்படாமல் தடுப்பதற்கு தமிழ் பேசும் மக்கள், இலங்கையின் எந்தப் பாகத்தில் வாழ்ந்தாலும் குரல் எழுப்பவேண்டும். இந்த ஆபத்தான திட்டத்தை இப்பொழுதே தடுத்து நிறுத்த நமது பிரதிநிதிகளும், தமிழ்பேசும் பெற்றோரும் முன்வராவிட்டால் தமிழ்பேசும்சந்ததிக்கே பெரும் துரோகமிழைத்த பழி ஏற்படும்.

## பாதுகாப்புசபையில் பாகிஸ்தான்

நியுயோர்க், நவ. 29

இந்தியாவுக்கு சொந்தமான காஷ்மீர் பகுதியில் இந்திய அரசாங்கத்தால் வருவிககப்பட்ட ஆயுதந் தாங்கிய படைகளுக்கும் ''காஷ்மீர் தேசியவீரர்'' களுக்குமிடையில் கடும் சண்டை நடைபெற்ற ஐ. நா. பாதுகாப்புசபைக் கூட்டத்தில் பாகிஸ்தானின் பிரதிநிதி செய்யது அஜாட்அலி தெரிவித்தார்

இஸ்லாமாபாத என்றஇடத்தில்மூன்று மணித்தியாலங்கள் நடைபெற்ற சண்டையில் 20 ''காஷ்மீர் தேசிய வீரர்கள்'' கொல்லப்பட்டார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (பி.டி.ஐ.)

# இராமநாதன் பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும்

## கொழும்பிலும் இரதபகுதிகளிலும் கிளைகள் நிறுவலாம்

### டாக்டர் தம்பையா யோசனை

யாழ்ப்பாணம். செவ்வாய்

''தமிழரின் பல்வகைக் கலைகளையும் கலாச்சாரத்தையும் மொழியையும் வளர்க்கும் பல்கலைக்கழகத்தை உருவாக்க முயற்சிசெய்யவேண்டும். சேர். இராமநாதனின் பெயரால் ஸ்தாபிக்கப்படும் இப் பல்கலைக் கழகம் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் இருக்கவேண்டியதில்லை. அதன் கிளைகள் ஈழத்தின் பல பாகங்களிலும் நிறுவப்படவேண்டும். சிறப்பாகக் கொழும்பில் அதன் கிளையொன்றை விஸ்தரித்து பொலிவுடன் விளங்கச்செய்யவேண்டும்.''

இவ்வாறு நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா சுன்னுகம் இராமநாதன் மகளிர்கல்லூரியில் நேற்று நடைபெற்ற சேர். பொன். இராமநாதன் நினைவு விழாவிற்குத் தலைமைவகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

பக்திசிரத்தையுடன் நடைபெற்ற இவ் வைபவத்தில் டாக்டர் தம்பையா மேலும் குறிப்பிட்டதாவது:

நாட்டிற்குஉழைத்த நல்லவர்களில் சீரும்சிறப்பும் பேரும் புகழும்பெற்ற தலைவர் சேர். பொன். இராமநாதன் அவர்களே. அவரும் அவர் சகோதரரும், அவரின் தாய்மாமன் சேர் முத்துக்குமாரசுவாமி அவர்களும், அன்னாரின் மைந்தன் ஆனந்தக் குமாரசுவாமி அவர்களும் நம் நாட்டிற்கும் தமிழினத்துக்கும் செய்த அரும்பணியை என்றும் மறவாமல் இருக்கவேண்டும். சட்டசபை இலங்கையில் முதன்முதலாக ஏற்பட்ட போது தமிழர் பிரதிநிதியாக 27 வயது இளைஞரான இராமநாதன் அவர்கள் அவர் சகோதரர் குமாரசாமிக்குப்பின் அங்கம் வகித்து தமிழரின் பெருமையை உயர்த்தியவர். சுதந்திரத்தை அடைவதே தம்வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டார். அரசியல்துறையிலும் சட்டஞானத்திலும் சேர். இராமநாதன் அவர்கள் ஈடுஇணையற்றவராக விளங்கியதோடு வேண்டியஇடங்களில்வேண்டியவாறு கருமமும் ஆற்றினார். சமுதாய சீர்திருத்தத்தில் பெரும் பங்குகொண்ட இவர் பல வருட காலங்களாக சட்ட நிருபணசபையின் அங்கத்தினராக இருந்துள்ளார். பொதுவிஷயங்களில் முன்னின்று உழைத்ததோடு, தமிழர் பண்பாட்டையும் பிறர் மதிக்கும் தரத்துக்கு உயர்த்தி, வாழ்ந்துகாட்டியவர். அஞ்சாமை வள்ளன்மை, நாவன்மை, அறிவுடைமையோடு ஒழுக்கசீலராகவும், கம்பீரமான அழகிய தோற்றம் உடையவராகவும் இருந்தார்.

சேர். இராமநாதன் ஆங்கிலத்திலும்தமிழிலும் திறம்பட உரையாற்றும்வல்லமை பெற்றவர். கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழியும் நாவன்மைபடைத்தவர் அவருடைய ஆங்கில சொற்பொழிவைக்கேட்ட ஆங்கிலேயரான தேசாதிபதி ஒருவர் ஆங்கிலேயரிலும் திறம்பட உரையாற்றவல்லார் இவரெனக்கூறி இத்தகைய பேச்சைத் தாம் ஒருபோதும் கேட்கவில்லைஎன்று பிரமிப்போடு கூறினார். சேர் இராமநாதன் அவர்கள் சபையிலே நின்று பேசும்போது பார்த்தவர்கள் அவரை ஒருபோதும் மறக்கமாட்டார்கள்.

அவர் வள்ளன்மை காலத்தால் அழிக்கப்படாதது. தமிழ் மொழிக்கும், கலைக்கும், கலாச்சாரத்துக்கும், நாகரீகத்துக்கும் பெரும் மதிப்புக்கொடுத்து வளர்த்தவர், தமிழரை தலைநிமிர்ந்து வாழ சக்திகொடுத்தவர். கல்வியே கருந்தனம் என [illegible] களும் சரிநிகர்சமமாகக் கற்றுவாழ வழிசெய்தவர். மகளிர்கல்லூரியாக இராமநாதன் கல்லூரியையும், ஆண்களுக்கு பரமேஸ்வராக் கல்லூரியையும் அமைத்துக் கொடுத்து, வருங்கால மக்களின் வாழ்வுக்கு ஒளிகூட்டி தமிழினத்தால் மறக்கமுடியாத தலைவராக என்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

### சமரசவாதி

சைவசமய நூல்களை ஆராய்ந்து பகவத்கீதையைத் தமிழில் மொழிபெயர்த்தும் சைவசித்தாந்த விருத்தியுரை எழுதியும் தமது பக்தி உணர்ச்சியை வெளியிட்டார். செந்தமிழிலக்கியம், இராமநாத தீபம், ஆத்திசூடி, மந்திரவிளக்கம் என்னும் நூல்களைத் தமிழில் இயற்றி மேல்நாட்டில் ஆன்ம சக்தி வளர்ச்சி என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதியதோடு, கிறீஸ்த சமயநூலாகிய, சென்மத்தியூ, சென் லூக் என்னும் வேதங்களுக்கு பிரபந்தத்தையும் நயம்பட எழுதியவர். இந்துமதம் சிறப்பாக விளங்க கோவில்கட்டி அதனைப் பராமரிப்பதற்குஉரிய நிலபுலன்களையும் கொடுத்து உதவியவர். இந்துமதத்தவராய்இருந்தும் பிறமதங்களை மதித்து நடந்த சமரசவாதி. அமெரிக்காவில் பிரசங்கம்செய்து புகழ்வாங்கியவர். அவர்தொண்டு செய்வதற்கென ஒதுக்கிய பொறுப்புடையோர் அவர் ஸ்தாபித்த தருமநிதியைமுறையாக பயன்பட்டுவர கவனித்துக் கொள்ளவேண்டும். இன்றைய நிலையில் அவர் தொட்டுவிட்டுச்சென்ற பணிகள் செம்மையுற, எங்களால்இயன்றவற்றைச் செய்வதே நம் மக்களின் பெருங்கடனாகும். அவர் வருங்காலத் தமிழ்மக்கள் நல்வாழ்வுபெற, கல்வி அறிவோடு மதபக்தியையும் இணைத்து வளர்த்து இலங்கை மக்கள் இணைந்துவாழ அரசியலமைப்பை சீர்படுத்தி, சீரிய வாழ்வு வாழ்ந்து காட்டியவர். அவரைப் பின்பற்றிவாழவேண்டியது இன்றைய தமிழ் மக்களுக்கு நன்மைபயப்பதாகும். அவர் செய்த தொண்டுகள் உயிர் தன்மை உடையவை. மேன் மேலும்வளர்ந்து பயன்தரக் கூடியவை. இவர்மனைவி பதி சொற்றவறாத பாவையாக இருந்து அவருக்கு உற்ற பெருந்துணையாக உதவி புரிந்துவந்தார். வாழ்வு சிறக்க இவரும் துணையாக நின்றார். இப்பெரியாரின் சேவைகள் வளர்ச்சிபெற்றுவரும்போது காலம் தன் கடமையைச் செய்துவிட்டது.

### பல்கலைக்கழகம் உருவாக்கவேண்டும்

அரசாங்கம் எல்லாப்பாடசாலைகளையும் எடுத்து நடாத்துகின்றது. சேர் இராமநாதன் அவர்களின் கல்லூரிகளும் அதனுள் சென்றுவிட்டன. மீதியாகவுள்ள நிலபுலங்களை கட்டிடங்களை எடுத்துத்தமிழரின்பல்வகைக்கலைகளையும் கலாச்சாரத்தையும் மொழியையும் வளர்க்கும்

(6-ம் பக்கம் பார்க்க)

# ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணத்தில் நடந்த கம்பன் விழாவிலே குறிப்பிடத்தக்க ஒரு விசேஷம் என்ன தெரியுமா? முதல் முறையாக ஒரு சிங்களவர் அதில் கலந்துகொண்டு, கம்பனையும் தமிழரையும் வாயார மனமாரப் போற்றியதுதான்.

தலையில் காந்திக் குல்லாய் அணிந்து, முகமெல்லாம் சிரிப்பாக ஒருவர் மேடையில் அமர்ந்திருந்தார். பார்த்தால் யாரும் அவரை ஒரு நல்லவரென்று சொல்லும்படியான அவ்வளவு பண்பான தோற்றம். சமீபத்தில் கொழும்பிலே தனிநாயக அடிகளார் பேசிய கூட்டத்திலும் மேடையில் அவரைக் கண்டேன். விசாரித்ததில் அவர்தான் திருக்குறளை சிங்களத்தில் மொழிபெயர்த்த சிங்களவரென்று தெரியவந்தது. அந்த சிங்களத் திருக்குறள் நூலைப் பார்த்தேன். அதற்கு ''ஸ்ரீ கீதா'' என்று பெயரிட்டு இருக்கிறார். திரு என்றால், ஸ்ரீ, குறள் என்றால் கீதா. ஆகவே தமது சிங்களத் திருக்குறளுக்கு அப்பெயர் வைத்துள்ளதாக விளக்கினார்.

அவர் பெயர் ஸ்ரீ சார்ள்ஸ் த சில்வா. ஆனால் அவருக்கு எவ்வளவு நீண்ட பட்டங்கள் தெரியுமா? சாகித்திய வாகீச்வராசார்ய, வித்யா வாசஸ்பதி என்பதாகும். அவர் முன்னர் கோவையிலே, பேராசிரியர் மீனாட்சிசுந்தரனாரிடம் தமிழ் உள்ளிட்டு பன்மொழிகளைப் பயின்றாராம். நீதியரசர் டாக்டர் தம்பையாவிடம் சட்டக்கல்வி படித்தாராம். இப்போது அவர் சிங்களப் பேரகராதிக் குழுவில் தொண்டாற்றுவதாக அறிந்தேன்.

அவர் இவ்விழாவுக்கென கம்பனுக்கு சிங்களத்திலே ஒரு பாமாலை பாடி, அதை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து, ஒரு சிறிய புத்தகத்திலே தம் கையாலே அச்சுப்போல் அழகாக எழுதிக் கொணர்ந்து அதைப் படித்தார். அதைத் தலைவர் மீயன்னா, சபையோருக்குக் காட்டி, அந்த எழுத்தைப் போல் தமிழ் மாணவரும் அழகாக எழுதப்பழகவேண்டுமென்றும் அறிவுறுத்தினார். அப்போது என் எழுத்தை நினைத்துக்கொண்டேன். கம்பாஸிட்டர்கள் எப்படித்தான் இதைப் புரிந்து அச்சுக்கோர்க்கின்றனரோ!

ஃ ஃ ஃ

''தமிழர் வேறு, சிங்களவர் வேறு அல்ல! இருவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவரே. சிங்கள மொழியில் பாதிச் சொற்கள் தமிழே'' என்று ஸ்ரீ சில்வா கூறி, தமிழரின் கலாச்சாரச் செல்வம் மிக மகத்தானதென்றும் இவ்வளவு சமீபத்திலிருந்தும் அதைச் சிங்களவர் தெரிந்து பயன்படுத்தாது இருப்பது பெரிய நஷ்டமென்றும் கூறி கம்பனின் காவியச் சிறப்பை வெகுவாகப் புகழ்ந்தார். அவர் பேசியபோது சபையோர் பன்முறையும் மகிழ்ச்சியுடன் கரகோஷம்செய்தனர்.

இக்காலத்தில் இப்படித் துணிச்சலுடன் உண்மை பேசும் சிங்களவரும் இருப்பதைப் பார்த்ததும் இரு சமூக உறவுபற்றியும் புது நம்பிக்கை ஏற்பட்டது. ராமாயணக் கதையின்படி, இலங்கை இப்போது விபீஷணனின் ஆளுகையில் இருப்பதாக ஐதீகம். அந்த விபீ

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியவீரரின் சடலங்களை சீனா ஒப்படைத்தது

## சிறைப்பிடித்த மூவரையும்கூட அது விடுதலை செய்து விட்டது

### ஆனால் இந்தியாவுக்கு 'பதிலடி' கொடுக்கப்படுமென எச்சரிக்கிறது

பீக்கிங், நவ 29

சிக்கிம் திபெத் எல்லையில் இரண்டு மாதங்களுக்கு முன் சீனத்துருப்புக்களால் கைது செய்யப்பட்ட மூன்று இந்தியப் போர் வீரர்களையும் சீனா விடுதலை செய்து நேற்று இந்தியத் துருப்புக்கள் வசம் அவர்களை ஒப்படைத்தது. ரோந்துக் காவலில் ஈடுபட்டிருந்த மூன்று இந்திய வீரரை சென்ற புதன் கிழமை சீனத் துருப்புக்கள் மறைந்திருந்து கடத்திச் சென்று சுட்டுக் கொலை செய்ததாக இந்தியா குறிப்பிட்டிருந்தது. அந்த வீரர்களின் சடலங்களையும் நேற்று சீனர் இந்தியத் துருப்புகளிடம் ஒப்படைத்தனர். இந்தச் சடலங்கள் வெள்ளைத்துணியால் மூடப்பட்டிருந்தன. சடலங்களுடன் மூன்று துப்பாக்கிகளும், தொலைநோக்கிக் கருவிகளும் மற்றும் அவர்களுடைய சொந்தப் பொருள்களும் வைக்கப்பட்டிருந்தன.

மூன்று இந்திய வீரர்களையும் மூன்று இந்திய வீரரின் சடலங்களையும் இந்திய வீரரிடம் ஒப்படைத்த அதே சமயத்தில், பீக்கிங்கிலுள்ள இந்திய தூதரகத்தில் சீனா ஆட்சேபனைக் குறிப்பு ஒன்றையும் ஒப்படைத்துள்ளது.

இந்திய-சீன எல்லையிலும் சிக்கிம் சீன எல்லையிலும் இந்தியத் துருப்புக்கள் சீனப் பிரதேசத்துக்குள் புகுந்து ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் இச்செயல்களை உடனடியாக நிறுத்த இந்திய அரசாங்கம் உத்தரவிடாவிட்டால் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு இந்தியாவே பொறுப்பேற்க வேண்டுமென்றும் அந்தக் குறிப்பில் சீனா தெரிவித்துள்ளது. இந்தியத் துருப்புக்கள், சீனத் துருப்புக்கள் மீது தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம், செய்து வருவதாகவும் இது நிறுத்தப்படாவிட்டால் சீனா பதிலடி கொடுக்குமென்றும் சீனா தனது குறிப்பில் தெரிவித்துள்ளது.

#### ஆத்திரமூட்டுவது சீன துருப்புக்கள்தான்

இந்திய - சீன எல்லையில் இந்தியப் பிரதேசத்துக்குள் ஊடுருவல் செய்து ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் சென்ற சில தினங்களாக சீனர்கள் தான் ஈடுபட்டு வருகிறார்களென்றும் எல்லையில் எல்லா முக்கிய பகுதிகளிலும் சீனத் துருப்புக்கள் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளைச் செய்துவருகிறார்களென்றும் லடாக்பகுதியில் இன்னும் சீனர் தாம் ஊடுருவல் செய்த பகுதியிலிருந்து வெளியேறவில்லையென்றும் இந்திய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நவம்பர் 22-ம் திகதி சுமார் 300 சீனத்துருப்புக்கள் சியாங்குலா கணவாயைக் கடந்து இந்தியப் பிரதேசத்துக்குள் 200 யார் தூரம் ஊடுருவி வடகிழக்கு எல்லைப்பிரதேசத்தில் சியாங் பகுதிக்குள் பிரவேசித்ததாகவும் பின்னர் நவம்பர் 24-ம் திகதி திரும்பிச் சென்றதாகவும் அதன் பின் நேற்று முன்தினம் மீண்டும் ஊடுருவல் செய்து சுட்டதாகவும் இந்திய அதிகாரி கூறினார். தமது நடவடிக்கைகளை மறைப்பதற்காக சீனர் இந்தியத்துருப்புக்கள் மீது பழியைப் போட்டு உண்மையைத் திரித்துக் கூறுகின்றது என்றும் அந்த அதிகாரி கூறினார்.

## ஆயுதந்தாங்கிய துருப்புக்கள் கைதிகளைகாவல்புரிகின்றனர்!

லண்டன். நவ. 29

1963-ல் 2,600,000 ஸ்ரேலிங் பவுண் ட்ரெயில் கொள்ளையில் ஈடுபட்டு, 30 வருட சிறைவாசம் அனுபவித்துவரும் லண்டனின் பிரபல ரெயில் திருடர்களான டக்ளஸ்கூடி, ரோய் ஜேம்ஸ், தோஸ்விஸ்பி ஆகியோரை இப்பொழுது, தானியங்கி ரைபிள்கள், ஆயுதங்கள் தாங்கிய துருப்புகள் காவல் புரிந்து வருகின்றனர்.

டெர்ஹாமில் உள்ள சிறைச்சாலையில் உருக்கினால் ஆக்கப்பட்ட அறைகளில் தங்கியிருக்கும் இவர்களின் நாளாந்த நடமாட்டம்பற்றி டெலிவிஷன்மூலம் அதிகாரிகள் கண்காணித்து வந்தனர்.

இவர்களை சிறைச்சாலையிலிருந்து மீட்டுச் செல்வதற்கு 30 பேர் கொண்ட கொள்ளைக் கோஷ்டி ஒன்று ஹெலிகோப்டர்மூலம் சிறைச்சாலையில் இறங்கி இவர்களைக் கடத்திச் செல்ல முயற்சித்து வருவதாக கிடைத்துள்ள நம்பகமான தகவலைத் தொடர்ந்தே இந்த மூன்று கைதிகளுக்கும் இவ்வித பாதுகாப்பு அளிக்கப்டுள்ளது என உள்நாட்டுமந்திரி பார்லிமெண்டில் தெரிவித்தார்.

30 வருட சிறைவாசம் அனுபவிக்க வேண்டிய மற்றும் இருவர் திட்டமிட்டு வெகு சாதுரியமாக சிறைச்சாலையில் இருந்து தப்பியோடி விட்டார்கள். (பி.டி.ஸி,)

## பாக்ராநங்கல் திட்டம்

### நேபாள மன்னர் பார்வையிட்டார்

சண்டிகட், நவ. 29

இந்தியாவில் மூன்றுவாரகால சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டுள்ள நேபாள மன்னர் மகேந்திரரும் ராணி ரத்னாவும் நேற்று பாக்ராநங்கல் அணைத்திட்டத்தைப் பார்த்தனர். அணைக்கட்டின்மீது நின்று கோவிந்தசாகர் நீர்த்தேக்கத்தை அவர்கள் பார்வையிட்டனர்.

பாக்ராநங்கல் அணைக்கட்டுத் திட்டத்தையிட்டு இந்தியா பெருமையடைவதில் நியாயமிருக்கிறது என்று மகேந்திரர் பின்னர் தெரிவித்தார்.

## பொன்னில் மொரோக்கோ மன்னர்

பொன், நவ. 29

மொரோக்கோ மன்னர் ஹசன் நேற்று மேற்கு ஜெர்மனிக்கு விஜயம் செய்தார். மேற்கு ஜெர்மன் அதிபர் டாக்டர் எர்ஹாட்டுடன் அவர் பேச்சு வார்த்தை நடத்தினார். மேற்கு ஜெர்மன் இஸ்ரேலுடன் ராஜீய உறவு ஏற்படுத்திக் கொண்ட பின் மேற்கு ஜெர்மனிக்கு முதல் தடவையாக விஜயம் செய்துள்ள அரபுத் தலைவர் இவர் ஒருவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

## சாம்பியாவுக்கு பிரிட்டிஷ் துருப்புகள்?

லண்டன், நவ. 29

ஸாம்பியாவில் உள்ள அணைக்கட்டைக் காவல்புரிவதற்கு பிரிட்டிஷ் துருப்புகளை அனுப்புமாறு ஸாம்பியாவின் ஜனாதிபதி திரு. கெனத்கவுண்டாவின் வேண்டுகோள் பற்றி பிரதமர் திரு. வில்ஸனிடம் நேரடியாகத் தெரிவிக்கவென மத்திய மழக்கு ஆபிரிக்க நாடுகளுக்குச் சென்றிருந்த பிரிட்டனின் விசேஷ பிரதிநிதி திரு. மக்கொம் மக்டொனால்ட் லண்டன் வந்து சேர்ந்தார். இவர் லுசாக்காவில் பல நாட்கள் தங்கி நின்று ஜனாதிபதி கெனத் கவுண்டாவுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

லண்டன் வந்து சேர்ந்த திரு. மக்டொனால்ட், பிரதமர் வில்ஸன். வெளிநாட்டு மந்திரி ஸ்டூவர்ட், காமன்வெல்த் காரியதரிசி ஆர்தர் பொட்டம்லி ஆகியோரை திரு. மக்டொனால்ட் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். திரு. மக்டொனால்ட் ஜனாதிபதி கெனத்கவுண்டா எழுதுத்து மூலம் கொடுத்த வேண்டுகோளைத் தன்னுடன் கொண்டுவந்தார். ஸாம்பியா நிதிமந்திரி திரு. யோன் ரெம்போவும் லண்டன் வந்துசேர்ந்தார்.

ஸாம்பியாவுக்கு துருப்புகளை அனுப்புவதுபற்றி நாளை செவ்வாய்க்கிழமை கூடும் மந்திரிசபையிலேயே முடிவு செய்யப்படுமெனத் தெரியவருகிறது. -பி.டி.ஸி.

## இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் தலைவர்

# ஐடிட் சுட்டுக் கொலை?

டோக்கியோ, நவ. 29

இந்தோனேஷிய கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் டி. என். ஐடிட் சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டதாக டோக்கியோவின் பிரபல பத்திரிகையொன்று ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

மத்திய ஜாவாவில் சிறை வைக்கப்பட்டிருந்த ஐடிட் சிறையிலிருந்து தப்பியோட முயற்சி செய்த சமயம் சுட்டுக் கொல்லப்பட்டதாக அந்தப் பத்திரிகையின் ஜாகர்த்தா நிருபர் சில ஆதாரங்களுடன் தெரிவித்துள்ளார். ஐடிட் சுட்டுக் கொல்லப்பட்ட விபரம் இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்னோவுக்கும் ராணுவத் தளபதி சுஹார்ட்டோவுக்கும் தெரிவிக்கப்பட்டதென்றும் அந்தச் செய்தி கூறுகிறது.

இந்தோனேஷியாவில் தோல்வியில் முடிவடைந்த புரட்சிசதிக்கு ஐடிட் காரணமாக இருந்தவரென்றும் புரட்சி வெற்றிபெற்றிருந்தால் ஐடிட் இந்தோனேஷிய அதிபராகியிருப்பாரென்றும் கூறப்பட்டது. மத்திய ஜாவாவில் புரட்சிக்குப்பின் ஏற்பட்ட கிளர்ச்சியில் ஐடிட் பெரும் பங்கு கொண்டிருந்தாரென்றும் கூறப்பட்டது. சென்ற மாதம் 22-ந் திகதி ஐடிட் கொலை செய்யப்பட்டதாக அந்தச் செய்தி கூறுகிறது.

## புதுடில்லியில் ஆஜண்டைனு மந்திரி

புதுடில்லி, நவ. 29

இந்தியாவின் உணவு நெருக்கடியைத் தீர்ப்பதில் உதவும்பொருட்டுப் பேச்சு வார்த்தை நடத்தவென ஆஜண்டைனு விவசாய மந்திரி திரு. வாட்டர் குக்லர் புதுடில்லி வந்துசேர்ந்தார். இவர் ஆஜண்டைனு மாவு வழங்குவது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்துவாரெனவும், 10 லட்சம் அந்தர் மாவை ஆஜண்டைனு வழங்குமெனவும் தெரியவருகிறது. பி. டி. ஸி.

## லாகூரில் ஆதரவுக் கூட்டம்

லாகூர், நவ. 29

இந்தியாவுடனான தகராறில் பாகிஸ்தான் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்குமுகமாக லாகூரில் நேற்று நடந்த பொதுக் கூட்டமொன்றில் முஸ்லிம் லீக், அவாமிலீக், முதலிய கட்சிகள் கலந்து கொண்டன. சர்வஜனவாக்கெடுப்பு நடத்துவது ஒன்றுதான் காஷ்மீர்ப் பிரச்னை தீர்வதற்குள்ள ஒரேவழியென்று அவர்கள் தெரிவித்தனர்.

## ''மலாய் தேசீய மொழியாகட்டும் தமிழுக்கு இடம் வேண்டும்''

### மலாய இந்தியர் கோரிக்கை

கோலாலம்பூர், நவ. 29

மலேசியாவில் மலாய் மொழி தேசிய மொழியாக்கப்படுவதை மலாயா இந்தியர் காங்கிரஸ் மீண்டும் வரவேற்றிருக்கிறது. மலாய் மொழி பேசாதவர்களது குறைகளைக் கவனித்து அவற்றை நீக்குவதாய்மலாயாப் பிரதமர் அளித்த வாக்குறுதிக்காக, காங்கிரஸ் அவருக்கு நன்றி தெரிவித்திருக்கிறது.

அரசாங்க அறிக்கைகள், சுற்றறிக்கைகள் மலாய் மொழியுடன் தமிழிலும் வெளியிடப்பட வேண்டுமென்றும் பஸ், மற்றும் போக்குவரத்துச் சேவைகளிலும் பெயர்ப்பலகைகள் மலாய் மொழியுடன் தமிழிலும் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்றும் அரசாங்க சேவைப் பரீட்சைகள் தமிழிலும் நடைபெறுவதுடன் தாய்மொழிக் கல்விக்கு உத்தரவாதம் அளிக்கப்படு பாடப் புத்தகங்கள் ஒரே மாதிரியாக இருக்க [illegible] மென்றும் காங்கிரஸ் [illegible]டுக் கொண்டது.

## 'பிரிட்டன் தவறிவிட்டது'

புலவாயோ (ரொடீஷியா), நவ. 29

ரொடீஷியாவின் சகல மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியதான சுதந்திரத்தை அளிக்கும்பொறுப்பை பிரிட்டன் தக்கமுறையில் செயலாற்றவில்லையென திரு. அயன் ஸ்மித்தின் மந்திரி சபையைச் சேர்ந்த மந்திரி ஒருவர் தெரிவித்தார். பி. டி. ஸி.

## பம்பாய் தலைமை நீதிபதி மரணம்

பம்பாய், நவ. 29

இரு வாரங்களுக்கு முன் மோட்டார் காரினால் மோதுப்பட்டு காயமடைந்து, மூர்ச்சையடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பம்பாய் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எச். கே. சைனி நேற்றிரவு காலமானார். 63 வயதான திரு. சைனி 1962 ம் 63-ம் ஆண்டுகளில் இரண்டு தடவைகள் மகாராஷ்டிர பதில் கவர்னராகக் கடமையாற்றியுள்ளார்.

## மீண்டும் மின்சாரம் வந்தது

லுசாகா, நவ 29

ரொடீஷியா - எல்லைப்பகுதியிலுள்ள கரிபா நீர்மின்சாரத் திட்டத்துக்கும் ஸாம்பியாவின் செம்புத் தொழில் பகுதியான சித்வேக்குமிடையிலுள்ள ஏற்பட்டிருந்த மின்சாரத்துண்டிப்பை தொழில் வல்லுனர் பலர் மிகவும் துரிதகதியில் பணியாற்றி மீண்டும் மின்சார இணைப்பை ஏற்படுத்தியுள்ளனர். இந்த இருபகுதிக்குமிடையேயான மின்சாரத் தொடர்பு வெடி வைத்து தகர்த்தெறியப் பட்டது. (பி.டி.ஸி)

## பதவி உயர்வு

ஊர்காவற்றுறை, திங்.

கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயத்தில் உதவி தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. கே. கணபதிப்பிள்ளை நாரந்[illegible] ராக நியமனம் பெற்றுள்ளார்.

## பிரிட்டிஷ் மந்திரி மாஸ்கோ பயணம்

லண்டன், நவ. 29

சோவித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி திரு. ஸ்டுவர்ட் லண்டனிலிருந்து மாஸ்கோவுக்கு இன்று புறப்பட்டார். அவருடன் பிரிட்டனின் படைக்குறைப்பு மந்திரியும் சென்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மலர்

தொடர் நவீனம்

## வாஞ்சி மலை

— க. கனகலிங்கம் —

சந்திரன் பால் நிலவுக் கரங்களால் உலகைத் தழுவிக் கொண்டிருந்தான். அப்பால் நிலவிலே, கருங்கடலின் அலைகள் வெள்ளிக் கம்பிபோல்ஒளிர்ந்தன. தண்மதியை அணைப்பதற்கு சமுத்திர மங்கை தன் அலைக் கரங்களை நீட்டிக்கொண்டிருந்தாள். நிலவொளியுடன் போட்டி போட்டுக் கொண்டு பரந்துகிடந்தது வெண்மணல். அந்த வெண் மணற் பரப்பிலே சிறுவர்கள் மண்வீடு கட்டியும், ஒருவர் மீது ஒருவர் மணலை வாரிவீசியும், ஆடிப் பாடியும் மாலைப் பொழுதை இன்பமாக கழித்துக்கொண்டிருந்தனர். நேரம் போகப் போக சிறுவர்களது நெஞ்சம் ஏமாற்றப்பட்டதால் நிறைந்திருந்தது.

''தாத்தா இன்று வரமாட்டார் எங்களை ஏமாற்றிப் போட்டார்'' என்று ஒவ்வொருவரும் கூறியபடி தம் மீடத்தைவிட்டு கலமுயற்சித்தனர்.

''பிள்ளைகளே இதோ வந்துவிட்டேன் என்றுகூவியபடி குழவி நடைபயின்று சிறுவர்களை நோக்கி வந்துகொண்டிருந்தார் தாத்தா. ''இதோ வந்திட்டார் தாத்தா'' என்றுஎல்லோரும் கூவியபடி ஓடோடிச்சென்று கிழவரின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு பரந்த வெண்மணற் பரப்பின் ஓர் இடத்தில் வந்தமர்ந்தனர். ''தாத்தா ஓர் பெரிய பயங்கரக் கதை சொல்வதாகச் சொன்னீர்களே அதை இன்று சொல்லத்தான் வேண்டும்'' என்று அடம் பிடிக்கவே கிழவர் தனது வரண்ட தொண்டையை ஒருமுறை கனைத்துக் கொண்டுசொல்லத்தொடங்கினார்.

''இதுவரை எதைமற்றவர்கள் அறியமுடியாதபடி மறைத்து வைத்திருந்தேனோ அதை, எனது வாழ்வில் ஏற்பட்ட பயங்கர அனுபவத்தை எனது இறுதி ஆசையாக உங்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன். கவனமாகக் கேளுங்கள் பிள்ளைகளே.

''இற்றைக்கு எழுபது ஆண்டுகட்கு முன் வாஞ்சி மலைநாட்டை வாஞ்சி மன்னன் என்பவன் ஆண்டு வந்தான். வாஞ்சிமலை நாட்டின் பெரும் பகுதி காடுகளால் நிறைந்திருந்தது இக் காடுகளில் கொடியவிலங்குகளும், கொடிய அசுரர்களும், அரக்கர்களும் வாழ்ந்து வந்தார்கள். அசுரர்களதும், அரக்கர்களதும் கொடுமை நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போயின. மன்னன் செய்வதறியாது கலங்கினான். நாள்தோறும் அரண்மனை வாயிலில் பிள்ளையை இழந்த தாயின் பரிதாப முகத்திலும், கால்நடைகளைப் பறிகொடுத்து பரிதவிக்கும் மாந்தரின் முகத்திலும் தான் விழிப்பான். அரசன் நாட்டு மக்களை இரவுவேளைகளில் இக்காட்டுப் பாதையால் யாரும் செல்லக்கூடாதென்று முரசறைவிப்பான். ''ஜாக்கிரதை'' என்ற வார்த்தைகளைக் கொண்ட அறிவிப்புப் பலகைகளை இப்பாதைகளில் பொருத்துவான். ஆனால் மறுநாள் அவை காணப்படமாட்டாது. இவைகள் காரணமாக அப்பாதையால் யாரும்போக அஞ்சுவார்கள். அப்பொழுது எனக்கு பன்னிரண்டு வயது. நான் எப்பொழுதும் பயந்த சுபாவம் படைத்தவன். எனது தந்தை பக்கத்துக் கிராமத்தில் சிறுகடை வைத்திருந்தார். தந்தையாரிடம் செல்வதென்றால் சாயந்தரம் சென்று மாலைப்பொழுதாவதற்குள் திரும்பிவிடுவேன். எனது கிராமத்திலிருந்து தந்தையார் வசிக்கும் கிராமத்திற்குச் செல்லும் வழியில் இரு சிற்றாறுகளையும், ஒரு பெரியாற்றையும் கடக்கவேண்டும். இந்த ஆறுகள் சிலவேளைகளில் சீற்றம் அடைவதுமுண்டு. இதன் காரணமாக போக்குவரத்துக்களும் தடைப்படுவதுமுண்டு.

அன்றொருநாள் தந்தையாரிடம் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தேன். வழியில் வானம் இருண்டது. இருட்பாவை தனது கரிய போர்வைக்குள் உலகை ஆட்கொண்டுவிட்டது. பயங்கர புயல் காற்று ஓ ஓ என்று வீச ஆரம்பித்தது. இடையிடையே மின்னலும் முழக்கமும் மாறி மாறி எதிரொலித்தன. இவையாவும் பயந்தாங்கொள்ளியாகிய எனக்கு மேலும் அச்சத்தை விளைவித்தன. தொடர்ந்து செல்லச் சக்தியற்றவனாய் நின்ற இடத்திலேயே அமர்ந்தேன்.

கேட்டுக் கொண்டிருந்த சிறுவர்களது முகங்கள் பீதியினால் சுருங்கின.

(தொடரும்)

## நெஞ்சத்தில் நிலைக்க

— மகான் —

○ ஜெர்மன் நீர்மூழ்கியினால் பிரிட்டிஷ் கப்பலான ''லுஸிடானியா'' மூழ்கடிக்கப்பட்டதில் 1,198 பேர் மாண்டனர் இவர்களில் 124 பேர் அமெரிக்கர். இச்சம்பவம் நடந்த தினம். 7-5-1915

○ முதலாவது உலக யுத்தத்தில் அமெரிக்கா பிரவேசித்த தினம் 8-3-1917.

○ முதலாவது உலக யுத்தம் முடிவடைந்த தினம் 11-11-1918.

○ பிரிட்டனும்பிரான்ஸும் யுத்தத்தைப் பிரகடனப்படுத்திய திகதி 3-9-1939.

○ பிரான்ஸ், பிரிட்டன் மீது இத்தாலி யுத்தத்தை பிரகடனப் படுத்தியதும், பிரான்ஸுக்குள் ஊடுருவியதும்10-6-1940

○ ரஷ்யாவை ஹிட்லர் தாக்கிய தினம்: 22-6-1941.

○ ஜப்பான்மீது அமெரிக்காவும் பிரிட்டனும் யுத்தத்தைப் பிரகடனப் படுத்தியது: 8-12-1941.

○ ஜெர்மனியும் இத்தாலியும் அமெரிக்காமீது யுத்தத்தைப் பிரகடனப் படுத்தியதினம்: 11-12-1941.

○ 20-7-1944-ல்ஹிட்லர் ஒரு குண்டு வெடித்ததில் காயமடைந்தார்.

○ மூஸோலினி கொல்லப்பட்ட தினம், 28-4-1945.

○ பெர்லின் வீழ்ச்சியடைந்தது: 2-5-1945.

○ ஹிரோஷிமா (ஜப்பான்) மீது அணுகுண்டு வீசப்பட்டது: 6-8-1945.

○ ஜப்பான்மீது ரஷ்யா யுத்தம் பிரகடனப் படுத்தியது: 8 8-1945.

○ ஜப்பான் சரணாகதியடைந்த தினம்: 14-8-1945.

○ காந்தி கொலைசெய்யப்பட்டது: 30-1-1948.

○ பலஸ்தீனாவில் யுத்த நிறுத்தம் அமுலானது: 7-1-1949.

நமது விஞ்ஞானம்

## செவ்வாய் வாசி

— இ. கிறிஸ்ரி —

பூமிக்கு அடுத்து கதிரவனைச் சுற்றிவருகிறதே செவ்வாய் என்கிற கோள். அதில் நம்மிலும் அறிவு ஆற்றலில் சிறந்த விஞ்ஞானத்தில் பெரும்முன்னேற்றம் கண்ட ஓர் உயிரினம் (செவ்வாய் வாசி) வாழ்வதாகச் சில வானியலார் கருதுகிறார்கள். இந்தச் செவ்வாய்வாசியைப் பற்றிய ஐதீகத்தை முதலில் ஏற்படுத்திய பெருமை கியோவானி ஷியப்பரெலி என்கிற இத்தாலிய வானியலாரைச் சாரும். 1877ம் ஆண்டில் அவர் செவ்வாயை தொலைநோக்கியின் மூலம் ஆராய்ந்து கொண்டிருக்கும்போது அதன் மேற்பரப்பில் சன்னமான கருங்கோடுகள் பரவிக்கிடப்பதுபோன்று அவருக்குத் தென்பட்டது. அக் கருங்கோடுகளுக்கு அவர் கால்வாய்கள் என்று பெயரைச் சூட்டி, செவ்வாய் வாசியால் தோண்டப்பட்ட கால்வாய்கள் எனக் கூறினார்.

இந்த செவ்வாய்வாசியை உலகறியச்செய்த பெருமை லௌவல் என்கிற அமெரிக்க வானியலாரைச் சாரும். இவர் செவ்வாயை ஆராயும்போது செவ்வாயிலுள்ள கருங்கோடுகள் வடதுருவத்திலும், தென்துருவத்திலுமிருந்து தொடங்கி வளைவேதுமில்லாமல் இணைகின்றன. வடதுருவத்திற்கு அல்லது தென்துருவத்திற்குப் பின்புறமாகச் சூரியன் நின்றால் வெண்ணிறமாய் இருக்கும். அதே துருவத்திற்கு எதிராகச் சூரியன் நின்றால் வெண்ணிறம் சிறிது சிறிதாக மறைந்து வேறு நிறத்தை அடைகிறது.

இவற்றையெல்லாம் ஆராய்ச்சிமூலம்கண்ட லௌவல் செய்வாய்வாசியைப் பற்றி ஒரு கற்பனைக் கதையைக் கூறினார்.

கோடானுகோடி ஆண்டுகளுக்குமுன்பு வெள்ளி புதன் பூமி, செவ்வாய் முதலியன கோளமாகஇருந்தன. பின்பு நெருப்பின் தன்மை தணிந்து திரவநிலையை அடைந்தது. பூமியைவிட செவ்வாய் சிறிது. பூமிக்கு முன் பல லட்சம் வருடங்களுக்கு முன்பு செவ்வாய் தோன்றியது. செவ்வாயில் காற்று நிறையிருந்தது ஒருபகுதி கடலால் சூழப்பட்டிருந்தன. எரிமலைகள் நிறைந்திருந்தன. மேகங்கள் பரவிக்கிடந்தன. இப்படியான செவ்வாயிலிருந்து காற்று வெளியேறத் தொடங்கிது. எரிமலைகள் எரிந்து, புகைந்து, மறைந்துபோயின. கடலுக்கு அப்பால் பல உயிரினங்கள் தோன்றின. அவற்றில் ஒன்றுதான் இந்தச் செவ்வாய்வாசியாம். பின்பு கடலிலுள்ள நீரும் வற்றத் தொடங்கியது. மேகங்கள் மறைந்தன. செவ்வாய்வாசிக்குத் தண்ணீர்ப் பஞ்சம் உண்டாகியது. சோலைவனமான செவ்வாய் பாலைவனமாக மாறியது. தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்காக வடதுருவத்தில் தொடங்கி தென்துருவம் வரைக்கும் கால்வாய்கள் வெட்டிவிட்டான் செவ்வாய்வாசி. வடதுருவத்திலும் தென்துருவத்திலும் குளிர்காலத்தில் பனி படர்ந்திருக்கும். கோடைகாலத்தில் சூரியனின் வெப்பத்தினால் பனி உருகி, நீராகக் கால்வாய் வழியாகச் செல்லும். செவ்வாய்வாசியின் தண்ணீர்ப் பஞ்சமும் தீரும். நிறம் மாறுவது இதனால்தான் எனக் கற்பனைக் கதையைக் கூறினார் லௌவல். இது உண்மையோ பொய்யோ என்பதை யாரறிவார்.

விஞ்ஞானப் பெரியார்கள்

## பெஞ்சமின் பிராங்க்ளின்

-- சி. சண்முகலிங்கம் --

இவர் அமெரிக்காவிலுள்ள பொஸ்டன் நகரில் 1906-ம் ஆண்டில் அவதரித்தார். இவர் இவரது குடும்பத்தில் பனைந்தாவது நபராகும். சிறு வயதிலேயே நீந்துவதில் திறமை கொண்ட இவர் தனது படிப்பைப் பத்தாம் வயதுடன் நிறுத்திக்கொண்டார். தனது பன்னிரண்டாம் வயதில் ஓர் அச்சகத்தில் அச்சுக் கோப்பாளராக பணி புரிந்தார். தாவர உணவின் சிறப்பை உணர்ந்த பிராங்க்ளின் தன் பதினாறுவது வயதில் தாவர உணவை உண்டு மாமிச உணவை நீக்கினார். தமது சுயமுயற்சியாலும், சொந்த அனுபவ அறிவாலும் பல புத்தகங்களை எழுதியதோடு மட்டுமின்றி சிறந்த அரசியல் வாதியாகவும் விளங்கினார். தன் அரசியல் வாழ்க்கையில் ஆபிரகாம்லிங்கனைப் போல அமெரிக்க அடிமைகளின் விடுதலைக்காக அயராது பாடுபட்டார். இன்று உயர்ந்த கட்டிடங்களில்இடி விழாமல் இருக்க இடியேறு தாங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. பல வீடுகளில்மின்சார முறையில் மண்ணெண்ணெய் அடுப்புகள் பாவிக்கப் படுகின்றன. இவற்றையெல்லாம் கண்டுபிடித்து உதவிய விஞ்ஞான மேதை பிராங்க்ளின் 1790ல் உயிரிழந்தார்.

## லெனின் பரிசு

--சி. குலேந்திரன்--

விஞ்ஞான என்ஜினியரிங், இலக்கிய கலைத்துறைகளில் தலைசிறந்த நூல்களைப் படைக்கும் ஆசிரியர்களுக்கு பிரதி வருடமும் லெனினின் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

லெனின் பரிசுகளுக்கான படைப்புக்களை விஞ்ஞான பேரவைகளின் தலைமைக் குழுக்களும், விஞ்ஞான என்ஜினியரிங் தொழில்நுட்பக் கழகங்களும், ஆராய்ச்சி

(6-ம் பக்கம் பார்க்க)

## நினைவிலிருப்பவர்

— "வாகீஸ்" —

மண்ணிலே எத்தனையோ கோடான கோடி மனிதர் பிறக்கின்றார்கள்; இறக்கின்றார்கள்! அவர்கள் எல்லோரையும் நாம் ஞாபகத்திலிருத்தி வைக்கின்றோமா? இல்லை. ஒருசிலர்தான் மக்கள் மனதிலே மறையாது நிலைத்து நிற்கின்றார்கள். நினைவிலே நிலைத்துவிட்ட தேசியத் தலைவராகத் திகழ்பவர் தான் சேர் பொன்னம்பலம் இராமநாதன்.

எமது இலங்கை மாநரிலே பிறந்து வளர்ந்த அந்த வள்ளல், சாதி மத பேதமின்றி, தமிழர், சிங்களவர் என்ற வித்தியாசமின்றி நாட்டு நன்மைக்காகப் பாடுபட்டு உழைத்தார். எனவேதான், இன்றும் சிங்கள மக்களாற்கூடப் போற்றிப் புகழப்படுகின்றார்.

உலகயுத்தம் மும்மரமாக நடந்துகொண்டிருந்த காலத்தில் தன்னுயிரையும் பொருட்படுத்தாது கடல் கடந்து சீமைசென்று, பிரிட்டிஷ் அரசினருடன் வாதாடி சிறைப்பட்டிருந்த சிங்களத் தலைவர்களை மீட்டுவந்த பெருமை சேர் பொன். இராமநாதனையே சாரும். இவை நடந்து நாட்கள் பல சென்றுவிடினும், அவர் தம் வீரத்தையும், துணிச்சலையும் அவராற்றிய அரும் பணிகளையும் இந்நாட்டு [illegible] பான்மை இனத்தவர்கள் கூட இன்னமும் மறக்கவில்லை. இலங்கைப் பாராளுமன்ற முன்றலில் நிறுவப்பட்டுள்ள அவரின் உருவச் சிலையே அவர்தம் பெருமைக்கோர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. சேர் பொன். இராமநாதன் அவர்கள் ஒரு அரசியல்வாதி மட்டுமல்ல; கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியவர். தலைசிறந்த பேச்சாளர்; சிந்தனைச் சிற்பி! வடமொழி, தென்மொழிகளிலும் ஆங்கில அறிவிலும் சிறந்து விளங்கி அந்நிய சட்டசபைகளை எதிர்த்து சிம்மக்குரல் லெழுப்பிய அவரின் துணிவை பாராட்டாதார் பாரிலிலர்.

அரசியல் துறையில் மட்டுமின்றி சமயத்துறையிலும் அவர் ஆற்றிய சமயச் சொற்பொழிவுகள் மக்களுக்கு நல்விருந்தாகஅமைந்துள்ளது. பிற மதங்களுடன் ஒப்பிட்டு அவராற்றிய சொற்பொழிவுகள் அவரின் திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. சிற்பக் கலையில் மிகுந்த ஈடுபாடு உடையவர் அவர். கொழும்பு கொச்சிக்கடையிலிருந்த ஸ்ரீ பொன்னம்பல வாணேசுவரின் செங்கற் கோயிலை, இலங்கையிலேயே மிகப் பெரிய கருங்கற் கோவிலாக்கி, திராவிட சிற்பக்கலைக் கூடமாக்கிய பெருமை அவருக்குரியது. அவருடைய ஆழ்ந்த சமயப்பற்றுக்கும், சிற்ப ஆர்வத்துக்கும் இது சான்றாகும்.

இத்தகைய பெருமகன், நாட்டுக்காக உழைத்த நன் மகன் மறைந்து [illegible] கள் மறைந்துவிட்டன. எனினும் அந்த வள்ளலை [illegible] நெஞ்சம் மறக்கவில்லை!



திருநெல்வேலி முத்துத் தம்பிவித்தியாசாலை பெற்றார் தின விழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்ற பொழுது மாணவிகள் இருவர் ராதா - கிருஷ்ணன் நடனம் ஆடும் காட்சி. நட்டுவாங்கம்: 'கீதாஞ்சலி' வி. கே. நல்லையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரியாலை ஐக்கிய கழகம் வெற்றி

யாழ்ப்பாணம், செவ். நாவாந்துறை சென். மேரீஸ் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் கடுமையான போட்டியின் பின்னர் வெற்றியீட்டியது.

இடைவேளைக்கு முன் நடைபெற்ற போட்டியில் முதலில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமே முதலாவது கோலைப் போட்டது. இக்கோஷ்டியின் முன்னணி வீரரான ரி. பத்மநாதன் எதிர்க் கோஷ்டி வீரர்களை ஏமாற்றி பந்தை வேகமாகக்கொண்டு சென்று வெற்றிகரமாகக் கோலுக்குள் உதைத்துத் தள்ளினார்.

இடைவேளைக்கு முன் சென். மேரீஸ் கோஷ்டிக்குக் கோல்கள் அடிக்கும் சந்தர்ப்பங்கள் பல கிடைத்தும் அதை அவர்கள் தவறவிட்டது அவர்களுடைய துரதிர்ஷ்டமாகும். இந்தவகையில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் கோல்காப்பாளரான ரி. தவராசாவைப் பாராட்டவேண்டும். நாவாந்துறைக் கோஷ்டியின் பின்னணி வீரரான மைக்கல்தாசன் அற்புதமாக விளையாடினார். அரியாலை கோஷ்டியைச் சேர்ந்த பி. த நாதனும், எஸ். சண்முகலிங்கமும் இக்கோட்டியினரின் விளையாட்டுக்கு உயிர் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். இப்போட்டி முடிவில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 1—0 கோலால் நாவாந்துறை சென். மேரீஸ் கழகத்தைத் தோற்கடித்தது. ஜின்னா மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. கபூர் மத்யஸ்தம் வகித்தார்.

# சனசமூக நிலையம் வென்றது

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சென். ஜோன்ஸ் ஆசிரியர் கோஷ்டி வெற்றியீட்டியது.

இடைவேளைக்கு முன் ஒருவருமே கோல் போடவில்லை. போட்டியில் பங்கு பற்றிய அத்தனை ஆசிரியர்களுக்கும் இவ்விளையாட்டில் பயிற்சி இல்லாத போதும் ஏதோ பழைய ஞாபகத்தில் உடல் குலுங்க ஓடி, ஆடி பந்தை விட்டுக் கலைத்துக்கொண்டிருந்தார்கள். இப்போட்டியில் பங்குபற்றியஒவ்வொரு ஆசிரியரின் செய்கைகளும் ரசிகர்களை வயிறு குலுங்கச் சிரிக்கவைத்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இடைவேளைக்குப் பின்பு சென். ஜோன்ஸ் கோஷ்டியில் ஒரு புது உற்சாகம் காணப்பட்டது. சென். ஜோன்ஸ் கோஷ்டி யாழ்ப்பாணக் கல்லூரிக் கோஷ்டியைச்சுற்றி வளைக்கத்தொடங்கியது. முதல் முறையாக சென். ஜோன்ஸ் கோஷ்டியின் வீரர் ஜே. எம். பொன்னையா தலைதெறிக்க ஓடி எதிர்க்கோஷ்டியின் கோல்க்காப்பாளர் மனம் கெலிக்க ஒரு கோலை மின்னல் வேகத்தில் வெளுத்து வாங்கினார். இந்தவகையில் எதிர்க்கோஷ்டியின் கோல்க்காப்பாளரிலும் பார்க்கச் சென். ஜோன்ஸ் கோல்க்காப்பாளர் எஸ். பஞ்சலிங் பாராட்டுக்குரியவர். இக்கோஷ்டியில் எம். கணேசசுந்தரம், யதுக்குலசிங்கம், மிகவும் அகோரமாகப் போட்டியிட்டனர். யாழ்ப்பாணக் கல்லூரிக் கோஷ்டியில் டி. எம். செல்வநாயகம் கனகரெட்னம் ஆகியோர் பாராட்டுக்குரியவர்களாவர். போட்டியில் சென். ஜோன்ஸ் 1—0 கோலால் யாழ்ப்பாணக் கல்லூரியைத் தோற்கடித்தது. யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஈ. ஏ. சாம்பியன் மத்தியஸ்தம் வகித்தார்.

# கல்லூரி ஆசிரியர்களின் ரசிப்பான விளையாட்டு

யாழ்ப்பாணம், செவ் சுண்டிக்குளி ஆல்ரவுண்டேஸ் கோஷ்டிக்கும் அரியாலை சனசமூகநிலையக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் அரியாலை சனசமூக நிலைய உதைபந்தாட்டக் கோஷ்டி வெற்றியீட்டியது.

சனசமூகநிலையக் கோஷ்டி சி. சண்முகலிங்கத்தின் தலைமையிலும் 'ஆல்ரண்வுடேஸ்' கோஷ்டி கே. நந்தகுமார் தலைமையிலும் விளையாடியது. போட்டி ஆரம்பிக்கப்பட்டு ஒடு சில நிமிடங்களில் சனசமுக நிலையக் கோஷ்டியைச் சேர்ந்த புவனநாதன் (முன்னணி வீரர்) பந்தை முன்னால் வேகத்தில் கொண்டுசெல்ல பலரும் கரகோஷம் செய்ய கோலுக்குள் உதைத்துத் தள்ளினார். சூட்டோடு சூடாக இக்கோஷ்டிக்கு ஒரு 'பனல்டி'யும் கிடைத்தது. இதைப்பயன்படுத்தி தவநாதன் வெகு சுலபமாக அதை ஒரு கோலாக்கினார். 'பாசிங்' செய்துவந்தபந்தை உதைத்துத்தள்ளி ஒரு கோல் பெற்றார். கடைசி நேரத்தில் இவருடைய முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

இடைவேளைக்கு முன் சனசமூக நிலையக் கோஷ்டி 2 கோல்கள் பெற்று 'ஆல்ரவுண்டேஸ்' ஒன்றுமில்லாதவாறு இருந்தனர். இடைவேளைக்குப்பின் 'ஆல்ரவுண்டேஸ் ஒரு கோல் பெற்றது. பொதுவில் போட்டி பார்ப்பதற்கு வெகு ரசிப்பாகக் காணப்பட்டது. இருகோஷ்டியுமே சிறப்பாக விளையாடியன. போட்டி முடிவில் அரியாலை சனசமூக நிலையம் 2—1 கோல்களால் சுண்டிக்குளி 'ஆல்ரவுண்டேஸ்' கோஷ்டியைத் தோற்கடித்தது. சனசமூகநிலைய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு [illegible] மகாலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

# "கம்பராமாயணம் சிங்கள மொழியில் வெளிவரவேண்டும்"

## சிங்கள அறிஞருக்கு மீனாட்சிசுந்தரனார் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ். "கம்பனின் காவியத்துக்குப்பிறகு தமிழ் இலக்கியத்திலே யொரு தேக்கம் ஏற்பட்டது. அறிஞர் தெ.பொ.மீ.யின் கூற்றுப்படி பழம் தமிழ் இலக்கியங்களுக்கு உரையெழுதவந்த உரையாசிரியர்கள் கம்பராமாயணத்தை மேற்கோள் காட்ட மறந்தபோதிலும், கம்பராமாயணம் 'மக்கள் இலக்கிய'மாக மலர்ந்தது அதன் தனிச் சிறப்பைக் காட்டுகின்றது" வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இரண்டாம் நாள் 'கம்பன் விழா'வில் திரு. கா. சிவத்தம்பி உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அண்ணாமலைபல்கலைக்கழக திராவிடமொழியியற் றுறை தலைவர், பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமையில நடைபெற்ற இவ்விழாவில் திரு. சிவத்தம்பி 'இலக்கிய வரலாற்றில் கம்பன்' என்னும் பொருள்பற்றிப் பேசினார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"கம்பராமாயணத்தை நாம் மூன்று விதமாகப் பிரித்துப் பார்க்கலாம். மொழி மரபுகளை எந்த முறையில் கம்பன் தமது காவியத்தில் பெற்றிருக்கிறான் என்பதையும்' பண்டைய பாரம்பரியத்தையும், புதுமையான நோக்கத்தையும் எவ்வாறு துடிப்புடன் அவன் எழுதியிருக்கிறான் என்பதையும், பிற்காலப் புலவர்கள். அறிஞர்கள் கம்பராமாயணத்தை எப்படி நோக்கியிருக்கிறார்கள் என்பதையும் கவனிக்கும்போது, கம்பர் தமது துறையில் பெரும் வெற்றியடைந்திருக்கிறார். புதுயுகத்தின் கவிஞர் பாரதிகூட தமது ஒரு பாட்டில் "உயர் கம்பனுடன் கவிதை போயிற்று" என்று பாடியிருக்கிறாரென்றால், அவன் சிறப்புத்தான் சொல்லக் கூடியதொன்றா?

இந்தியாவில். இந்த இருபதாம் நூற்றாண்டில்கூட கம்பராபாயணம் பெரும் அரசியல் பிரச்னையாக்கப்பட்டு, அதனை எரித்துவிட வேண்டுமென்றுகூட கங்கணம் கட்டினார்கள். இதனால் அரசியல் அறிஞர்கள் கம்பராமாயணத்தைத் தொட்டுப்பார்க்கத் தொடங்கினார்கள்.

கம்பராமாயணம் இந்தியாவிலோ, வெளிநாடுகளிலோ சிறப்புப் பெற்றது போல, பலர் படித்துச் சுவைத்ததுபோல, இலங்கையிலும் அந்தப் பெரும் காவியத்தை விரும்பிப்படித்தார்கள்என்றோ அந்தக்காவியத்துக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது என்றோசொல்ல முடியாது. கந்தபுராணமும், பெரியபுராணமும், திருவிளையாடற்புராணமும்தான் இலங்கை முதுபெரும் அறிஞர்களின் கைகளை அலங்கரித்தது. இலங்கையிலும் கம்பரையும் கம்பராமாணத்தையும் பெருமளவு அறிமுகப்படுத்திய, அறிமுகப்படுத்தும் பெருமை இலங்கைக் கம்பன் கழகத்துக்கே சாரும்"

திரு. க. சி. குலரத்தினம் 'கம்பன்கண்ட சகோதரத்துவம்' என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் குறியதாவது:-

"கம்பர் தமது காவியத்தில் படலத்துக்குப் படலம் சகோதரத்துவத்தைக் காட்டுகிறார். இராமன் சுக்கிரீவ[illegible] பிரித்துப்பேசாமல் கூறுகிறான். சுக்கிரீவனைத் தனது சகோதரனாகப் பார்க்கும் பெருந்தன்மையை இராமனிடம் காட்டுகிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். இதேபோன்றே இராமன் குகனை, விபீஷணனை தனது சகோதரர்களாக்கிக்கொள்ளும் சம்பவங்களை கம்பர் காட்டும்போது, சகோதரத்துவத்தின் பெருமையை விளக்கிவிடுகிறார்.

இதைவிட சகோதரத்துவத்தை கம்பர் இன்னொரு இடத்தில் அருமையாக விளக்குகிறார். விபீஷணன் இராமருடன் சேர்ந்து இராவணனை எதிக்கிறான்; ஆனால் இராவணன் தன் தம்பி விபீஷணனுக்கு எந்தவிதமான ஆபத்தும் வராதபடி பார்த்துக்கொள்வதை கம்பர் தமது காவியத்தில் காட்டி, சகோதரத்துவத்தின் இணைப்பின் மகத்துவத்தைக் காட்டுகிறார். கம்பர் தமது காவியத்தில் சகோதரத்துவத்துக்கு முதவிடம் கொடுக்கிறார்."

'இராமாயணக் கவிஞர் வரிசையிற் கம்பர்' என்னும் பொருள்பற்றி திருக்குறளை சிங்களத்தில் மொழிபெயர்த்த சாகித்திய வாகீச்வராசாரிய, வித்தியா வாசஸ்பதி ஸ்ரீ சாள்ஸ் சில்வா பேசுகையில் கூறியதாவது:

"இங்கு பேசும்பொழுது தமிழர்—சிங்களவர் என்ற வேற்றுமை ஒருதுளிகூட இல்லாத நிலையில்தான் பேசுகிறேன். சிங்களத்தில் வழங்கப்படுகின்ற 50 வீதத்துக்கு மேற்பட்ட சொற்கள் தமிழிலிருந்துதான் வந்தவை என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன. ஆகையால், இந்த விதத்திலேயாவது தமிழர் சிங்களவருக்கிடையில் ஒரு பாலம் இருக்கிறதல்லவா! கம்பர்தான் வால்மீகியின் மறுபிறப்பு என்று சொல்லக்கூடியவிதத்தில் கம்பர் இராமாயணத்தை மிக அருமையாகப் படைத்திருக்கிறார்."

விழாவுக்குத் தலைமை வகித்த பேராசிரியர் தெ. பொ. மீ., ஸ்ரீ சாள்ஸ் தசில்வாவுக்கு வேண்டுகோள் ஒன்றினை விடுத்தார்.

"கம்பராமாயாணத்தை சிங்களமக்கள் அறியக்கூடிய விதத்தில் அதை சிங்கள மொழியில் மொழிபெயர்க்க வேண்டுமென அன்புக்கட்டளையிடுகிறேன்" என்று பேராசிரியர் தெ. பொ, மீ. திரு. சில்வாவைக் கேட்டுக் கொண்டார். திரு. சில்வா அதனை ஏற்றுக்கொண்டார்.

திருப்பூங்குடி வி. க. ஆறுமுகம் கோஷ்டியினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும், யாழ். இந்துக்கல்லூரி மாணவர்களின் 'ஞானக்கண்' நாடகமும் திருநெல்வேலி பாரதிகலாமன்ற மாணவியரின் நடனமும் விழாவில் இடம்பெற்றன.

# ஆபிரிக்க மாணவர் வேண்டுகோள்

பீகிங், நவ. 29

அயன்ஸிமித்தின் அரசாங்கத்துக்கு எதிராக உள்ள இயக்கத்துக்கு சகல ஆபிரிக்க நாடுகளும் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும் என சீனாவிலுள்ள ஆபிரிக்க மாணவர்கள் ஆபிரிக்க நாட்டு அரசாங்கங்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர் என சீன செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. இந்த எதிர்ப்பு இயக்கத்துக்குச் செய்யக்கூடிய சகல சிறப்பாக ஆயுத உதவியை தயங்காது செய்ய வேண்டும் என ஆபிரிக்க மாணவர்கள் விடுத்த வேண்டுகோள் ஒன்றில் கோரியுள்ளனராம்.

(பி. டி. ஸி.)


# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

தம்பலகமம், ஆனைக்குட்டி, அலவரை வயல் 2 1/2 ஏச்கர் தண்ணீர்ப் பாய்ச்சலும் இருபோக விளைவுமுடையது விற்பனைக்குண்டு. எழுதுக: சி. கண்ணன், கலாபவனம், பருத்தித்துறை. 1415

சங்கானை கிழக்கு சுடுகாட்டு றோட்டிற்குக் கிழக்குப்பக்கமாக 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. வாங்கவிரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தொடர்புகொள்ளவும்: விஞசித்தம்பி செல்வத்துரை, மாதகல் கிழக்கு, மாதகல். 1427

## தேவை

பீடி சுற்றும் தொழிலில் அனுபவமுள்ளவர்களும், கைத்தறி நெசவு வேலையில் அனுபவமுள்ளவர்களும் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சாலி கோப்பறேஷன், 30, 32 பேங்ஷால்வீதி, யாழ்ப்பாணம். 1423

மனேஜரும், ஸ்றோர்கீப்பரும் தேவை. சம்பளம் முறையே ரூபா 250/- ரூபா 175/- கொடுக்கப்படும். பிணைப்பணம் முறையே 3500/- . 1750/- கட்டக்கூடியவர்கள் நற்சான்றுப்பத்திரங்களுடன் சமுகமளிக்கவும். சாலி கோப்பறேஷன், 30, பேங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 1426

## பாடப்புத்தகம்

1966-ம் ஆண்டுக்குப் பாடப்புத்தகங்கள் தெரிவு செய்யும்பொழுது தெய்வத்தின்கொடை - அருமையான பாடப்புத்தகங்கள். திருவே. சிவக்கொழுந்து கணிதங்கள், மனக்கணிதங்கள்- அக்ஷரகேத்திர உயர்தர அக்ஷர எண்கணிதங்கள்- இல்ங்கைச் சரித்திர பூமி சாத்திர விளக்கங்கள் சூழல் முதலாம் நூல்களை ஆலோசனையிற் கொள்ளும்படி ஆசிரியர்களை வேண்டுகிறோம். விலைப்பட்டியலுக்கெழுதுக. கலாபவனம், வியாபாரிமூலை, பருத்தித்துறை. 1416

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக்இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


# மொலும்பாவுக்கு ஆதரவு

லியப்போல்ட்வில்லி, நவ. 29

கேணல் மொலும்பாவை பிரதமராகக் கொண்ட புதிய மந்திரி சபைக்கு காங்கோ பார்லிமெண்ட் அக்கீகார மளித்திருக்கிறது. மொலும்பாவின் மந்திரி சபையில் முன்னாள் காங்கோ அதிபர் கஸவுபுவின் கட்சிக்கும் முன்னாள் பிரதமர் ஷோம்பேயின் கட்சிக்கும் சமபிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மந்திரி சபையில் ஷோம்பே அங்கம் வகிக்காத போதிலும் புதிய அரசாங்கத்துக்குத் தாம் பூரண ஒத்துழைப்பை அளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கம்பனின் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் உயிருள்ளவை"

## கம்பன் விழாவில் தெ. பொ. மீ. பேச்சு

யாழ்ப்பாணம், திங்.

"எந்தவொரு மேனாட்டு காவியங்களும் போட்டிபோடமுடியாதவிதத்தில் கம்பர் தமது காவியத்தைப்படைத்திருக்கிறார்; சுருங்கச் சொன்னால், கம்பர் ராமாயணத்துக்குள் புகுந்து பலவிதமான பாத்திரங்களாக மாறியிருக்கிறார். அவருடைய பாத்திரங்கள் ஒவ்வொன்றும் உயிருள்ளவை"

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நேற்று மாலை இரண்டாம் நாளாக நடைபெற்ற கம்பன் விழாவில், சொற்பொழிவு நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்த அண்ணாமலைப் பல்கலைக்கழக திராவிட மொழியியற் றுறைத் தலைவர் பன்மொழிப் புலவர் பேராசிரியர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. க. சி. குலரத்தினம், திரு. கா. சிவத்தம்பி, ஸ்ரீ சாள்ஸ் தி சில்வா ஆகியோர் கம்பனின் சிறப்புக்கள் பற்றிப் பல தலைப்புகளில் சொற்பொழிவாற்றினார்கள்.

பேராசிரியர் திரு. தெ. பொ. மீ. மேலும் பேசுகை கூறியதாவது:-

''குலோத்துங்க சோழன் ஆட்சி புரிந்த பன்னிரண்டாம் நூற்றாண்டிலேதான் கம்பர் வாழ்ந்தார் என்று சொல்வதை ஏதோ என் மனம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. குலோத்துங்க சோழனும், அவன் வாரிசுகளும் எப்படி எப்படியெல்லாம் நல்ல முறையில் ஆட்சி புரிய வேண்டுமென்பதை எடுத்துக்காட்டுவதற்காகவே தமது காப்பியத்தில் கதாநாயகன் இராமரை ஓர் உதாரணமாகப் படைத்தார். இதைக் கவனிக்குமிடத்தில் குலோத்துங்கசோழன் காலத்தில் கம்பர் வாழ்ந்தார் என்று எப்படிச் சொல்ல முடியும்?

கம்பர் ஓர் சிறந்த உரையாசிரியர் என்றும் சொல்லலாம்; வள்ளுவரின் கருத்துக்களை, கம்பராமாயணத்தில் காண்டத்துக் காண்டம் தந்திருக்கிறார்.''

திருப்பூங்குடி வி. க. ஆறுமுகத்தின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

---

# தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டுசெய்கிறார்

## அம்பிகைபாகனுக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், திங்கள்

''அமைதியாக இருந்துகொண்டு அம்பிகைபாகன்செய்து வரும் தொண்டு, அங்கிருந்து பார்க்கிற எமக்கு தெளிவாகத் தெரிகிறது; தமிழுக்கும் சைவத்துக்கும் அவர் செய்துள்ள சேவை, செய்துகொண்டிருக்கிற சேவை காலத்தால் அழியாததொன்றாகும்''

வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் நேற்றுமாலை நடைபெற்ற கம்பன் விழாவில், வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. ச. அம்பிகைபாகனுக்கு அளிக்கப்பட்ட பாராட்டு வைபதில்,பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் பாராட்டிப்பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பேராசிரியர் தெ. பொ. மீ. மேலும் பாராட்டிக்கூறியதாவது:

''முதல்முறை நான் இலங்கைக்கு வந்தபோது வைத்தீஸ்வர வித்தியாலயம் ஒரு குடிசையாகவிருந்தது; பின்னர் வந்தபோது கொட்டகையாகவிருந்தது; இப்போது பெரிய கட்டடமாகக்காட்சியளிக்கிறது. இப்படியே வளர்ச்சியடைந்த பெரிய கல்லூரியாக்கிய பெருமை இந்த அம்பிகைபாகனையே சாரும்.

தீண்டாமை ஒழிப்பு இப்படியெல்லாம் பேசிக்கொள்கிறோம். ஆனால் அதனைச் செயலில்காட்டிய பெருமை எங்கள் அருமை அம்பிகைபாகனுக்குத்தான் உண்டு.

எம்போன்றவர்களை தமிழ்நாட்டிலிருந்து அழைத்து இங்கு விழாக்கள் வைத்துத் தமிழை வளர்க்கும் ஒரு பெரியார் இங்கு இருக்கிறாரென்றால் அவர் அம்பிகைபாகனாகத்தான் இருக்க முடியும்!''

திரு. கே. பி. ஹரன் திரு. அம்பிகைபாகனை அறிமுகம் செய்துவைத்துப் பேசுகையில், இலங்கை சாகித்திய மண்டலத்தில் அங்கத்தவராகவும், இலங்கைச் சர்வகலாசாலை செனட் அங்கத்தவர்களில் திரு. அம்பிகைபாகன் ஒருவராகவும் இருக்கிறாரென்றும், யாழ்ப்பாணத்தில் ஒரு சர்வகலாசாலை உருவாக்கப்பட்டால் அதற்கு உபவேந்தராக வரக்கூடிய தகுதி அவருக்கு உண்டென்றும் சொன்னார்.

திரு. ச. அம்பிகைபாகன் தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

கம்பன் கழக பொதுச் செயலாளர் திரு. க. சொக்கலிங்கம் நன்றியுரை நிகழ்த்தினார்.

---

# தமிழரசு மத்தியகுழு தீர்மானம்

கொழும்பு, ஞாயிறு

தமிழ் மாணவர்களை எதிர்நோக்கியிருக்கும் பிரச்னைகளை எடுத்துக்கூறவும் இந்த மாணவர்களுக்கு போதிய கல்வி வசதியளிக்க கூடிய ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரவும் பிரதமரைச் சந்தித்துப்பேட்டிகாண்பதென கொழும்பில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் கூடிய தமிழரசுக் கட்சி மத்திய செயல் கமிட்டி தீர்மானித்தது.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் ஆகியோரைக் கொண்ட குழு பிரதமரைப் பேட்டிகாண்பதென முடிவுசெய்யப்பட்டது.

வியாபாரம் பெருக

விளம்பரம் செய்க

---

# லெனின் பரிசு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனங்களும், உயர்தரக் கல்வி ஸ்தாபனங்களும், தொழில்சங்கங்களின் அகில யூனியன் மத்தியகவுன்ஸிலின் தலைமைக்குழுவும், கலைஞர், இசையமைப்பாளர் சங்கங்களின் சபையும் உழைப்பாளி மக்களின் கூட்டங்களும் சிபார்சுசெய்கின்றன.

லெனின் பரிசுக்கு சிபார்சு செய்யப்படும் படைப்புக்கள் சோவியத் நாட்டின் தேசிய மட்டத்தில் விவாதிக்கப்படுகின்றன. விவாதிக்கப்படும் படைப்புக்களைப் பற்றி நாடகப்பிரியர்களும், விஞ்ஞானிகளும் அபிப்பிராயங்களைப் பத்திரிகை வாயிலாக வெளியிடுகின்றனர்.

லெனின் பரிசுப் போட்டியில் இடம்பெறுபவர்கள் மூன்று மட்டங்களில் தேர்ச்சிபெற வேண்டும். இதில் இரகசிய வாக்கெடுப்பும் இடம்பெறும். தலைசிறந்த சோவியத் விஞ்ஞானிகளையும், என்ஜினியர்களையும், இலக்கியகர்த்தாக்களையும், கலைஞர்களையும், சோவியத் குடியரசுகளைச் சேர்ந்த கலாச்சார பணியாட்களையும், தொழிற்சங்கப் பிரமுகர்களையும், உள்ள [illegible]க்கிய லெனின் பரிசு கமிட்டிகளிலும், அவைகளின் உட்பிரிவுகளிலும் படைப்புக்கள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

---

# மாணவர் களைபிடுங்கினர்

யாழ்ப்பாணம், செவ்.

சென்ற வியாழக்கிழமை காலை 8 மணியளவில் காரைநகர் யாழ் நகர்க் கல்லூரியின் சுமார் 250 மாணவ மாணவிகள் கல்லூரிக் கொடியை ஏந்திக்கொண்டு கமத்தொழிலின் சிறப்பைப் பற்றிய கோஷமிட்டுக்கொண்டு பாடசாலை அதிபர் திரு க. சிவராசாவின் தலைமையில் களைபிடுங்கும் இடத்தை அடைந்தார்கள். பகுதி வித்தியாதரிசி திரு ச. சபாபதி குழுமியிருந்த மாணவர்கள் மத்தியில்பேசுகையில் கமத்தொழில் சிறப்பைப்பற்றியும் 1966-ம் ஆண்டு தொடக்கம் கமத்தொழில் கட்டாய பாடமாக அமையவேண்டியகாரணத்தையும் விளக்கினார், ஊர்காவற்றுறை கமத்தொழில் பொறுப்பதிகாரி திரு பொ. நவரத்தினசாமி பேசுகையில், இந்த இயக்கம் சிரமதான மூலம் செய்யப்படுகிறது என்றும் உழவுக்கும்தொழிலுக்கும்வந்தனை செய்வோம் என்று பாரதியார் சொன்ன வாசகத்தை நினைவுபடுத்தி எல்லோரும் கமத்தொழிலில் ஈடுபட வேண்டுமென்றும் சொன்னார்.

மாணவ மாணவிகள் சுமார் இரண்டு ஏக்கர் விஸ்தீரணம் உள்ளநிலத்தில்களை பிடுங்கினார்கள்.

---

(5-ம் கலத் தொடர்ச்சி

ளுகும் இப்பெரியார்கள்சமுதாயத்தின் உள்ளத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மூச்சு நின்றபோதும், மக்கள்மூச்சிலேகலந்து, இதயத்திலே புகுந்து, நாளாக நாளாக வளர்ந்து அழியாதபுகழுடம்பு பெற்று சிரஞ்சீவித் தன்மையடைகின்றனர். இப்பெரியோர் செய்த நன்மைகளை நெஞ்சிருத்தி அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதோடு அவர்கள் செய்தபணிக்குஅவர்களுக்கு ஞாபகச்சின்னங்கள் நிறுவும்படி வேண்டுகிறேன், அவர்களுக்கு ஒரு சிறந்த ஞாபகச் சின்னம் கலாச்சாரபல்கலைக்கழகமே. இப்படி ஒருஸ்தாபனத்தை நிறுவிக்க வேண்டுமென்பதே திரு. நடேசபிள்ளையின் நோக்கம். இதை [illegible] ரும்முயலவேண்டும்.

---

# ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஷணனே நேரில்வந்து பேசுவதுபோல்இருந்தது!

பேராசிரியர் ஒரு விசேஷ வேண்டுகோளைத் தமது சிங்களச் சீடரான ஸ்ரீ சார்ள்ஸுக்கு விடுத்தார். கம்பராமாயணத்தைச் சிங்களத்தில் மொழிபெயர்த்து, கம்பன் மூலம் இரு சமூகத்தவருக்கும் ஒரு நல்ல பாலம் அமைக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இது மிக மகத்தான பணி. கம்பன்கழகத்தாரின் முக்கிய வேலைத்திட்டத்தில் இதுவுமொன்று. கம்பனைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க ஸ்ரீசில்வா மிகப் பொருத்தமானவர் என்றே எனக்குப் பட்டது. கம்பனிடத்தில் தான் அவருக்கு எவ்வளவு பக்தி விசுவாசம்! இந்த மொழிபெயர்ப்புக்கான பணியைச் சாகித்திய மண்டலத்தாரும் கம்பன் கழகத்தாரும் சேர்ந்து ஸ்ரீ சில்வாவுக்கு அளித்து அதற்கான போதியவசதியையும்செய்து கொடுக்கவேண்டும். திருக்குறளை அழகாக மொழிபெயர்த்தவர் இப்பணியைச் செய்ய முற்றிலும் தகுதி வாய்ந்தவராவர்.

ஃ ஃ ஃ

துடியாம் துடியின் முழக்கந்தானுஞ் சொல்லுவார்
சொல்லெல்லாஞ் சோதிப்பானும், படிதானும் பாவ
மறுப்பானுகும் பால் நீற்றனும் பரஞ்சோதிதானும்,
கொடியானுங் கூற்றையுதைத்தானுகுங் கூறாத வஞ்சக்குயவர்க்கென்றும், கடியானுங் காட்சிக் கரியானுகுங் கருகாவூரெந்தைதானே.

— அப்பர்அடிகள்

---

# இராமநாதன் .....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகத்தை உருவாக்கமுயற்சிசெய்யவேண்டும். ஈழத்திலிருக்கும் பிரமுகர்கள் இப்பணியில் முன்னின்று உழைத்து எல்லோரும் பெருமையோடு வாழத் தம்மாலான உதவிகளைச்செய்ய வேண்டும். சேர் இராமநாதனின் பெயரால் ஸ்தாபிக்கப்படும் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் மாத்திரமிருக்க வேண்டியதில்லை. அதன்கிளைகள் ஈழத்தின பல பாகத்திலும் நிறுவப்பட வேண்டும். சிறப்பாகக் கொழும்பில் அதன்கிளையொன்றை ஸ்தாபித்துபொலிவுடன்விளங்கச் செய்வது பெருமனம் படைத்த செல்வர்களின் கடனாகும். சேர் இராமநாதனின் பெயரால் நடைபெறும் கழகத்துக்கு மற்றச்சமூகத்தவர்ளும்துணைபுரிவர். தமிழ்மக்களின் ஊக்கமும், அயராத உழைப்புமே இன்று இதற்கு வேண்டியுள்ளது.

சேர் இராமநாதன் அவர்கள் செய்து விட்டபணியினை அவர்தம்மருமகனார் திரு சு. நடேசபிள்ளை அவர்கள் தொடர்ந்து சிறப்பாக செய்துவந்தார். அரசியல் வாழ்வில் சிறப்புற்று அமைச்சராகக்கடமைபுரிந்தபிள்ளை அவர்கள் தமிழுக்கும்சைவத்துக்கும் அயராது உழைத்ததோடு, தமிழ்க்கலை ஈழத்திலும் வளர்க்க பெருமுயற்சி எடுத்துவந்தார்.

சேர் இராமநாதன், நடேசபிள்ளை ஆகியோருக்குயாழ்ப்பாணத்துமக்கள் செய்தபிரதியுபகாரம் யாது? அவர்களது சேவைக்கு மதிப்பளிக்க வேண்டுமானல் அவர்கள் வழியிலேயே தொண்டுசெய்யும் பரம்பரையைவளர்த்து வரவேண்டுமானல், அவர்களுக்கு நினைவுச்சின்னங்களை நிறுவி, விழாஎடுத்து மதிப்பளிக்கவேண்டியது ஈழத்துப் பெருமக்களது தலையாயகட

(4-ம் கலம் பார்க்க)

---

6-வது வெற்றி வாரம்!

கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2, 6, 9-30 மணிக்கு

தென்னாட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!

எம். ஜி ஆர். — சரோஜாதேவி

(இருவேடங்களில்)

ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னு, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி

நடித்த



விஜயா கம்பைன்ஸ்

எங்கவீட்டுப் பிள்ளை

(ஈஸ்ட்மென்கலர்)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி; 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org